

## ரெனேசான்ஸ் அறக்கட்டளை

## BEST INSTITUTION

**ரெனேசான்ஸ் அறக்கட்டளை**, புதுக்கோட்டை மாவட்டம் ரெனேசான்ஸ் அறக்கட்டளை, 30 ஆண்டுகளாக அறிவுசார் குறையுடையவர்களுக்கான சிறப்பு பள்ளி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மேலும், 42 இல்ல வாசிகளுடன் 14 வயதிற்கு மேற்பட்ட அறிவுசார் குறையுடையோருக்கான தொழிற்பயிற்சி இல்லம் மற்றும் 50 இல்ல வாசிகளுடன் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான தொழில் பயிற்சியுடன் கூடிய மறுவாழ்வு இல்லம் செயல்படுத்தி வருகிறது. இவ்வில்லவாசிகளுக்கு தொழிற்பயிற்சியாக, காய்கறி தோட்டங்கள் அமைத்தல், கால் மிதியடி தயாரித்தல், மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்ற தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஆதரவற்ற நிலையில் சுற்றித் திரியும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து 84 நபர்களை மீட்டு மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லத்தில் சேர்த்து மறுவாழ்வு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையின் கீழ் செயல்படும் தேசிய அறக்கட்டளையின் நிறுவன உறுப்பினராக இந்நிறுவனம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான சிறப்பு ஒலிம்பிக் நடத்திய தடகளப் போட்டிகளில் இல்ல வாசிகள் மற்றும் மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கி, பங்கு பெறச் செய்து 26 பதக்கங்களை பெறுவதற்கு உறுதுணையாக இருந்துள்ளது.

எனவே மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு பணிக்காக நீண்டகால சேவை செய்துவரும் இந்நிறுவனத்திற்கு மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக அரும்பணி ஆற்றிய சிறந்த தொண்டு நிறுவனத்திற்கான தமிழ்நாடு அரசின் விருது வழங்கப்படுகிறது.

**RENAISSANCE TRUST, PUDUKKOTTAI** has been providing special education since 30 years for the welfare of intellectually challenged children. In addition to this, the trust is maintaining residential Home with vocational training unit (in gardening, doormat weaving, candle making) for the 42 adult mentally challenged and 50 mentally ill persons. It has helped 84 wondering mentally ill persons to provide institutional care and rehabilitation services. It has been registered as member under National Trust by the district administration. It has helped 26 DAPs to win victorious medal in Special Olympics and various sports events.

Hence this institution is awarded as "**Best Institution"** for its outstanding services for long period.